

# பல்வேறு கலாச்சார மற்றும் மொழிசார்ந்த (கால்டு) பெண்களுக்கு இரண்டாம் செயற்திட்டம் எவ்வாறு உதவும்

**தேசியத் திட்டம் என்றால் என்ன?**

பெண்களுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் எதிரான வன்முறையைக் குறைப்பதற்கான தேசியத் திட்டம் 2010-2022
தேசியத் திட்டம் எனவும் அழைக்கப்படும் ஒரு நீண்ட காலத் திட்டம், சகல அவுஸ்திரேலிய அரசுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். தேசியத் திட்டத்தின் நோக்கம் யாதெனில்:

### அவுஸ்திரேலியப் பெண்களும் அவர்கள் குழந்தைகளும் வன்முறையற்ற பாதுகாப்பான சமூகத்தில் வாழ்தல்

பல்வேறுபட்ட பிரிவுப் பெண்கள் வேறுபட்ட வன்முறைகளை எதிர்கொள்கிறார்கள். சிலர், மற்றவர்களை விட அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களாகவும், சிலர் பல்வேறு கலாச்சாரப் பின்னணிகளிலிருந்தும் மாறுபட்ட மொழிகளைக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தவர்களாக, அகதிகளாக மற்றும் சர்வதேச மாணவர்களாக வந்தவர்கள் தனித்தன்மை வாய்ந்த சவால்களைச் சந்திக்கலாம். இவைகள், பணப் பற்றாக்குறை, வன்முறைகளைச் சந்தித்தால் ஆதரவு கிடையாமை, வன்முறையிலிருந்து மீள முடியாத உணர்வுகள் போன்றவை. புதிய மொழி, கலாச்சாரம் மற்றும் விதிகளும்(சட்டம்) நிலைமையை மேலும் சிரமமாக்கும்.

### இரண்டாவது செயற் திட்டம் என்ன?

தேசிய திட்டத்தின் நான்கு படிமுறைகளில் இரண்டாவது அம்சமே இந்த இரண்டாவது செயல் திட்டமாகும். இது 2013 முதல் 2016 வரை செயற்படுவதோடு, பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான இன்றியமையாத அம்சங்களென அனைத்து அரசாங்கங்களும் ஏற்றுக்கொண்ட 26 நடைமுறைசார்ந்த செயற்பாடுகளைக் கொண்டதாகும்.

முதலாவது செயல் திட்டத்தின் போது, பெண்களுக்கெதிரான வன்முறையை நிறுத்துவதற்கும், அது தொடர்பில் பதிலளிப்பதற்கும் மற்றும் அது பற்றிய விடயங்களைக் கற்றுக்கொள்வதற்குமான முக்கியமான அத்திவாரங்கள் இடப்பட்டன. இருப்பினும் இன்னும் அனேக விடயங்களைச் மேற்கொள்ளவேண்டியுமுள்ளது.

நாங்கள் பல்வேறு கலாசார மற்றும் மொழிசார்ந்த சமூகங்களுக்கான பின்புலத்திலிருந்துகொண்டு, பெண்களுக்கெதிரான வன்முறையை எங்களால் எவ்வாறு சிறப்பாகத் தடுக்க முடியும் என்பதை அறிவதற்கு நாம் ஆவலாகவுள்ள அதேவேளை, அவ்வாறு பாதிக்கப்படுகின்ற பல்வேறு காலாசார, மொழிசார்ந்த பெண்களுக்கு உதவி வழங்குவதற்கும் நாம் விருப்பத்தோடுள்ளோம்.

இரண்டாவது செயல் திட்டமானது, கால்டு பெண்கள் உட்பட பல்வேறுபட்ட வன்முறைகளை எதிர்கொண்டுள்ள பெண்கள் மற்றும் சமுதாயங்கள் மீதான உறுதியானதொரு மைய அவதானத்தைக் கொண்டுள்ளதோடு, சம்பந்தப்பட்ட சேவைகள் மற்றும் முறைமைகள் மூலமான உதவிகளை எவ்வாறு மேம்படுத்தல் என்பது தொடர்பிலும் ஆராய்கிறது.

நாங்கள் கால்டு பெண்கள் எதிர்கொள்கின்ற பல்வேறுபட்ட வன்முறைகள் பற்றி கண்டுகொள்ள வேண்டியிருப்பதோடு, கால்டு சமுதாயப் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பில் மேலும் அறிந்துகொள்வதற்கான தேவையும் எமக்குண்டு.

உங்களின் உதவியுடன் உங்கள் சமுதாயத்தில், நீங்கள் அறிந்த பெண்களையும், இளம் பெண்களையும் பாதுகாக்க எந்த முறை வெற்றி பெறும் என்பதை நாம் அறியலாம். பெண்களுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் எதிரான வன்முறையைக் குறைப்பது ஒரு சமுதாயப் பிரச்சனை – எமது எல்லோரதும் முயற்சி இதற்குத் தேவையாகும்.

**இரண்டாவது செயற் திட்டத்தின் கீழ் பல்வேறு கலாச்சார மற்றும் மொழி சார்ந்த பெண்களுக்கு** (கால்டு) **உதவி செய்ய என்ன நடக்கின்றது?**

அடுத்த மூன்று வருடங்களில் பல்வேறு கலாச்சார மற்றும் மொழி சார்ந்த பெண்களுக்குப்(கால்டு) பின்வரும் வழிகளில் நாம் உதவுவோம்:

- பல்வேறு கலாச்சார மற்றும் மொழி சார்ந்தோர் (கால்டு) மற்றும் பூர்வீகக் குடிமக்கள் சமுதாயங்களுடனான **ஈடுபாட்டினை அதிகரிக்கும் நோக்கில் வைற் றிப்பன் (வெள்ளைப் பட்டி) அமைப்புக்கு மேலதிக நிதியிடலை வழங்கல்**

- **வெளிநாட்டு வாழ்க்கைத் துணை வீசாவில் உள்ள பெண்களுக்கு அறிவூட்டவும் ஆதரவளிக்கவும் வேண்டிய சாதனங்களை உருவாக்குதல்.** இவற்றில் அவுஸ்திரேலியாவிலுள்ள முக்கிய சேவைகள் மற்றும் அவசரத் தொடர்புகள் பற்றிய தகவல்களும் உள்ளடங்கும்.

- வெளிநாட்டுத் துணைக்கென வீசாவுக்கு விண்ணப்பிக்கும் அவுஸ்திரேலியக் கணவர்கள் அல்லது நிச்சயிக்கப்பட்ட கணவர்களிடமிருந்து **மேலதிகத் தகவல்களை வேண்டுதல்**

- **பெண்களுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் எதிரான வன்முறைத் தடைக்கான நிறுவனத்திற்கு நிதி வழங்கி** பல்வேறு கலாச்சார மற்றும் மொழி சார்ந்த பெண்களின் (கால்டு) மற்றும் சமுதாயங்களின் பக்கம் கவனத்தைப் பலப்படுத்தி “கால்டு” வின் குறிப்பிட்ட முதல் நிலைத் தடுப்புத் திட்டத்தை வழங்குதல்.

- “கால்டு” வின் இளம் தலைமுறைக்கும் சமூகத்திற்கும் **சிறப்பு வளங்களை ஏற்படுத்தும் நோக்கில் *த லைன்* எனும் அமைப்புடன் தொடர்ந்து பணியாற்றுதல்.**

- “கால்டு” வின் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிரான வன்முறையை நிறுத்துவதற்கான ‘பணிகள் யாவை’ என்பது பற்றி **ஆராய்ச்சி செய்யும் நோக்கில் பெண்களின் பாதுகாப்பிற்கான அவுஸ்திரேலியத் தேசிய அமைப்பிற்கு நிதி வழங்குதல்.**

- பெண்களின் பிறப்புறுப்புகளைச் சிதைத்தல், கட்டாயமானதும் அடிமைத்தனமானதுமான திருமணங்கள் மற்றும் கடத்தல்கள் **போன்ற பெண்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் தீமை விளைவிக்கும் கலாச்சாரப் பழக்கங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.**

- **“கால்டு” பெண்கள் மற்றும் சமூகங்கள் தகவலறிவதற்கும் தமது வளங்களுக்குமான அணுகலை மேம்படுத்தவும் மற்றும், பங்குபற்றுதலுக்கும் தலைமைத்துவத்திற்குமான வாய்ப்புக்களை** எடுத்துரைப்பதற்குமானதொரு **தொடர்பாடல் உபாயமொன்றை உருவாக்கல்.**

## “கால்டு” பெண்களுக்கு உதவ இதுவரையில் நாம் என்ன செய்துள்ளோம்?



இந்தக் கடந்த மூன்று ஆண்டுகளில் நாம் ஒன்றுபட்டு:

- “கால்டு” சமூகங்கள், பல் தரப்பட்ட முதல் நிலைத் தடைச் செயற்பாடுகள், வன்முறைத் தடுப்புப் படைப்பிரிவு மற்றும் செயலமர்வுகள், சமூகக் கலந்துரையாடல்கள் மற்றும் சுமுகமான உறவுப் பட்டறைகள் போன்றவற்றை முன்னெடுக்கச் **சமுதாயச் செயல் மானியங்களுக்கு நிதி வழங்கியுள்ளோம்.**
- ஆண்களும் பெண்களும் சமமான நிலையில், ஆரோக்கியமான உறவுகளை இளைஞர்கள் கட்டியெழுப்ப, உதவும் பிரச்சாரமாகிய ***த லைன்* அமைப்பின் கீழ், பல தரப்பட்ட சமூகங்களுக்கும் மொழிசார் பிரிவுகளுக்குமான வளங்களை ஆரம்பித்துள்ளோம்**.
- மக்கள், குடும்பம் சார்ந்த மற்றும் வீடு சார்ந்த வன்முறை மற்றும்/அல்லது பாலியல் தாக்குதல் போன்றவை இடம் பெற்றிருந்தால், உதவிகள் பெற, **தேசியத் தொலைபேசி ஆலோசனைச் சேவைக்கு நிதி வழங்கியுள்ளோம்**. **1800 RESPECT (1800 737 732)** இலவசச் சேவை, 24 மணிநேரம், கிழமையில் 7நாட்கள், சகல தகவல்களின் அந்தரங்கம் காக்கப்படும்.
- குடும்ப வன்முறைக்கு ஆளாகிக்கொண்டிருக்கும் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், உதவ **தாதிகளுக்கு உடல் நலப் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கியுள்ளோம்**.

**உங்களுக்கு உதவி வேண்டுமா?**

நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த யாராவது, வீடு சார்ந்த மற்றும் குடும்ப வன்முறை அல்லது பாலியல் தாக்குதலுக்குள்ளாகிக் கொண்டிருந்தால், உதவி பெற அழையுங்கள்:

- **000** நீங்கள், ஒரு குழந்தை, அல்லது இன்னொருவர் உடனடி ஆபத்தில் இருந்தால்
- 1800 RESPECT - **1800 737 732**
- உறவுகள் அவுஸ்திரேலியா – **1300 364 277**
- ஆண்களுக்கான தொடர்பு – **1300 789 978**

## மேலும் அறிய வேண்டுமா?

தேசியத் திட்டம் மற்றும் இரண்டாம் செயற் திட்டம் ஆகியன இந்த இணையப் பக்கத்தில் கிடைக்கும்: **www.dss.gov.au/nationalplan**

